ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 2.2 – காஸையாடை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 2.2 – காசையாடை

‡ காசை ஆடை மூடி ஓடிக் ⋆
காதல் செய் தானவன் ஊர் ⋆
நாசம் ஆக நம்ப வல்ல ⋆
நம்பி நம் பெருமான் ⋆
வேயின் அன்ன தோள் மடவார் ⋆
வெண்ணெய் உண்டான் இவன் என்று ⋆
ஏச நின்ற எம் பெருமான் ⋆
எவ்வுள் கிடந்தானே ‖ **2.2.1** ‖

தையலாள் மேல் காதல் செய்த ⋆
தானவன் வாள் அரக்கன் ⋆
பொய் இலாத பொன் முடிகள் ⋆
ஒன்பதோடொன்றும் ⋆
அன்று செய்த வெம் போர் தன்னில் ⋆
அங்கோர் செஞ்சரத்தால் உருள ⋆
எய்த எந்தை எம் பெருமான் ⋆
எவ்வுள் கிடந்தானே ‖ **2.2.2** ‖

முன் ஓர் தூது ⋆
வானரத்தின் வாயில் மொழிந்து ⋆
அரக்கன் மன் ஊர் தன்னை ⋆
வாளியினால் மாள முனிந்து ⋆
அவனே பின் ஓர் தூது ⋆

ஆகி மன்னர்க்காகிப் பெரு நிலத்தார் ⋆
இன்னார் தூதன் என நின்றான் ⋆
எவ்வுள் கிடந்தானே ॥ **2.2.3** ॥

பந்தணைந்த மெல் விரலாள் ⋆
பாவை தன் காரணத்தால் ⋆
வெந் திறல் ஏறேழும் ⋆
வென்ற வேந்தன் விரி புகழ் சேர் ⋆
நந்தன் மைந்தன் ஆக ஆகும் ⋆
நம்பி நம் பெருமான் ⋆
எந்தை தந்தை தம் பெருமான் ⋆
எவ்வுள் கிடந்தானே ॥ **2.2.4** ॥

பாலன் ஆகி ஞாலம் ஏழும் உண்டு ⋆
பண்டால் இலை மேல் ⋆
சால நாளும் பள்ளி கொள்ளும் ⋆
தாமரைக் கண்ணன் எண்ணில் ⋆
நீலம் ஆர் வண்டுண்டு வாழும் ⋆
நெய்தலம் தண் கழனி ⋆
ஏல நாறும் பைம் புறவில் ⋆
எவ்வுள் கிடந்தானே ॥ **2.2.5** ॥

சோத்தம் நம்பி என்று ⋆
தொண்டர் மிண்டித் தொடர்ந்தழைக்கும் ⋆
ஆத்தன் நம்பி செங்கண் நம்பி ⋆
ஆகிலும் தேவர்க்கெல்லாம் ⋆
மூத்த நம்பி முக்கண் நம்பி என்று ⋆
முனிவர் தொழுதேத்தும் ⋆

நம்பி எம் பெருமான் ⋆
எவ்வுள் கிடந்தானே ‖ **2.2.6** ‖

திங்கள் அப்பு வான் எரி கால் ஆகி ⋆
திசை முகனார் ⋆
தங்கள் அப்பன் சாமி அப்பன் ⋆
பாகத்திருந்த ⋆
வண்டுண் தொங்கல் அப்பு நீள் முடியான் ⋆
சூழ் கழல் சூட நின்ற ⋆
எங்கள் அப்பன் எம் பெருமான் ⋆
எவ்வுள் கிடந்தானே ‖ **2.2.7** ‖

முனிவன் மூர்த்தி மூவர் ஆகி ⋆
வேதம் விரித்துரைத்த புனிதன் ⋆
பூவை வண்ணன் அண்ணல் ⋆
புண்ணியன் விண்ணவர் கோன் ⋆
தனியன் சேயன் தான் ஒருவன் ஆகிலும் ⋆
தன் அடியார்க்கினியன் ⋆
எந்தை எம் பெருமான் ⋆
எவ்வுள் கிடந்தானே ‖ **2.2.8** ‖

பந்திருக்கும் மெல் விரலாள் ⋆
பாவை பனி மலராள் ⋆
வந்திருக்கும் மார்வன் ⋆
நீல மேனி மணி வண்ணன் ⋆
அந்தரத்தில் வாழும் ⋆
வானோர் நாயகனாய் அமைந்த ⋆

இந்திரற்கும் தம் பெருமான் ⋆
எவ்வுள் கிடந்தானே ‖ **2.2.9** ‖

‡ இண்டை கொண்டு தொண்டர் ஏத்த ⋆
எவ்வுள் கிடந்தானை ⋆
வண்டு பாடும் பைம் புறவில் ⋆
மங்கையர் கோன் கலியன் ⋆
கொண்ட சீரால் தண் தமிழ் செய் மாலை ⋆
ஈர் ஐந்தும் வல்லார் ⋆
அண்டம் ஆள்வதாணை ⋆
அன்றேல் ஆள்வர் அமர் உலகே ‖ **2.2.10** ‖

அடிவரவு — காசையாடை தையலாள் முன் பந்தணைந்த பாலன் சோத்தம் திங்கள் முனிவன் பந்திருக்கும் இண்டை வில்

காசையாடை முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்